# ஒன்றிய அரசின் நெருக்கடிகளிலிருந்துமீள ஒரே மருந்து மாநில சுயாட்சிதான்!

## முதல்வர் உரை!... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலங்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு, மாநில மக்களின் அடிப்படை உரிமைகளையே ஒன்றிய அரசிடம் போராடிப் பெற வேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கிறோம். ஒன்றிய நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மாநிலங்களுக்குப் பகிரப்படும் நிதியானது, தொடர்ந்து செம்மையான முன்னெடுப்பு நடவடிக்கைகளால் பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள மாநிலங்களின் பங்களிப்பிற்கு ஈடாக அல்லாமல் குறைவாகப் பகி ரப்படுகிறது.

**நீதியரசர் குரியன் ஜோசப் குழு அறிக்கை!**

இதனையடுத்துதான், இத்தகைய இக்கட்டான சூழலில், கூட்டாட்சிக் கருத்தியலை வலியுறுத்தும் வகையிலும், ஒன்றியமாநில அரசுகளின் உறவுகளை, கொள்கை களை மேம்படுத்திடவும், இந்திய அரச மைப்புச் சட்டத்தின் விதி க்கூறுகள், நடை முறையிலுள்ள சட்டங்கள், ஆணைகள் ஆகியவற்றை அனைத்து நிலைகளிலும் ஆராய்ந்து மதிப்பீடு செய்திடவும் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரைச் செய்திடவும் உயர்மட்ட அளவிலான குழு ஒன்றினை அமைப்பது என தமிழ்நாடு அரசு முடிவெடுத்தது.

இப்படி உச்ச நீதிமன்ற மேனாள் நீதியரசர் குரியன் ஜோசப் அவர்களைத் தலைவராகவும், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியும் இந்திய கடல்சார் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணை வேந்தருமான அசோக் வர்தன் ஷெட்டி அவர்களையும், தமிழ்நாடு மாநில திட்டக்குழு மேனாள் துணைத்தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன் அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட குழு தனது அறிக் கையை கடந்த 16ஆம் நாள் என்னிடம் வழங்கியது.

பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக பேரவை உறுப்பினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கும், ஒன்றிய அரசுக்கும் நான் சொல்லிக் கொள்வது, "மாநில சுயாட்சி வேண்டும்; ஒன்றியத்தில் கூட்டாட்சி மலர வேண்டும்!" (மேசை யைத் தட்டும் பலத்த ஒலி) இது தனிப்பட்ட ஒரு அரசியல் கட்சியின் கோரிக்கை அல்ல; இந்திய நாட்டு மக்களின் வாழ்வி யலுக்கும், வளர்ச்சிக்கும் முக்கியமான கோரிக்கை! கூட்டாட்சி என்பது வாழ்வி யல் உணர்வு! பன்முகத் தன்மை கொண்ட இந்தியாவுக்கு கூட்டாட்சிதான் அடிப்படை! இதைத்தான் அந்த அறிக்கையும் நிறுவு கிறது. எனவே, இத்தகைய தன்மை கொண்டதாக இந்திய அரசமைப்புச் சட்டத்தை நாம் மாற்ற வேண்டும்.

**மீண்டும் அரசியல் சட்டத்தைத் திருத்த முடியும்!**

1994இல் எஸ்.ஆர்.பொம்மை வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், "கூட்டாட்சி என்பது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதி" என்று சொல்லப்பட்டுள்ளது. அத்தகைய கூட்டாட்சிக் கோட்பாட்டை அரசமைப்புச் சட்டத்தின் பண்பாடாகச் சேர்க்க வேண்டும். அதற்கு அரசமைப்புச் சட்டத் திருத்தமும், சீர்திருத்தமும் தேவை. கடந்த 76 ஆண்டுகளில் 106 முறை இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. எனவே, நாம் முயன்றால் மீண்டும் இந்திய அரசமைப்புச் சட்டத்தை திருத்த முடியும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இந்தியாவை முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடாக மாற்றுவதற்கான முயற்சி களை நாம் தொடங்கியாக வேண்டும். அதிகாரமும், வாய்ப்புகளும் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது. அவை பரவலாக் கப்பட வேண்டும். அதற்கான சட்டபூர்வமான வழிகளை இந்த அறிக்கை நமக்கு வழங்கி இருக்கிறது. கூட்டாட்சித் தன்மை கொண்ட தாக இந்திய அரசமைப்புச் சட்டத்தை மாற்று வது இந்திய ஒன்றியத்தைப் பலவீனப் படுத்தாது என்று இந்த அறிக்கை கூறுகிறது. அனைத்து அதிகாரங்களையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு கபளீகரம் செய்யும் சூழலில், ஆளுநர்கள் மூலமாக மாநில அரசுகளைச் செயல்பட விடாமல் தடுக்கும் நிலையில், இந்தித் திணிப்பின் மூலமாக, நிதி நெருக்கடி களின் மூலமாக, தொகுதி மறுவரையறை என்ற சதியால், ஜி.எஸ்.டி.யால் தமிழ்நாடு அனுபவித்து வரும் நெருக்கடிகளில் இருந்து மீள ஒரே மருந்து மாநில சுயாட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனை அரசமைப்புச் சட்டத்திரு த்தத்தின் மூலமாக மட்டுமே அடைய முடியும்.

**அனைத்து அரசியல் இயக்கங்களுக்கும் இந்த அறிக்கை அனுப்பிவைக்கப்படும்!**

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையிலும், மாநிலங்களவையிலும் இந்தக் கொள்கைக்கான வலிமையான ஆதரவு தெரிவிக்கும் ஜனநாயகச் சக்திகள் அதிகமாக இருக்கிறார்கள்; எண்ணிக்கையாலும், எண்ணங்களாலும் அதிகமாக இருக்கிறார் கள், அவர்களை ஒன்று திரட்ட வேண்டும். எனவே, இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் இயக்கங்களுக்கும் இந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒன்றிய அரசும், மாநிலங்களும் போட்டி யாளர்கள் அல்ல; இருவரும் பொதுவான ஒரு அமைப்பின் பங்குதாரர்கள். மாநிலங் கள் வளர்ந்தால்தான் ஒட்டுமொத்த இந்தியா வும் வளர முடியும் என்பதை ஒன்றிய அரசுக்கு உணர்த்துவோம். இப்படிப்பட்ட பின்னணியில்தான், நமது குடியரசின் அரசமைப்புச் சட்டத்தின் உயிர்ப்பைத் தீர்மானிக்கும் முக்கியமான தருணத்தில் நாம் நிற்கிறோம். நாம் இதுவரை பயணித்த பாதையை மீளாய்வு செய்து, உண்மை யான கூட்டாட்சிக் கருத்தியல் வலுப்பெறும் வகையில் நமது எதிர்காலத்தை வடிவ மைக்க வேண்டிய நேரம் இது. இதற்கு சட்டபூர்வ வழிமுறைகளை ஆராய்ந்து, முதற்கட்ட அறிக்கையை வழங்கிய மாண்பமை உச்ச நீதிமன்ற மேனாள் நீதியரசர் திருமிகு குரியன் ஜோசப், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான திருமிகு அசோக் வர்தன் ஷெட்டி, பேராசிரியர் மு.நாகநாதன் ஆகி யோருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அறிக்கையை தற்போது இந்த மாமன்றத்தின் மேலான பார்வைக்கு இப்போது வைக்கிறோம். இந்தியாவின் ஒற்றுமை - ஒருமைப்பாடு பன்முகத் தன்மை - மக்களாட்சிப் பொறுப்புணர்வு அரசமைப்புச் சட்ட ஒழுங்குமுறை ஆகியவற்றோடு, முதிர்ச்சி பெற்ற கூட்டாட்சி நாடுகளின் சிறந்த நடைமுறைகளையும் உள்ளடக்கித் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த அறிக்கையை அனைவரும் திறந்த மனத்துடன் ஏற்று, அறிவார்ந்த விவாதங்களை நடத்தி செழுமைப்படுத்த வேண்டும். ஒன்றியமாநில உறவுகளில் சமநிலையை மீட்டெடுக்க வேண்டும்.


மாநிலங்கள் வலுவாக இருந்தால்தான் ஒன்றிய அரசு வலுவாக இருக்கும். மாநிலங்களால்தான் நாட்டுக்கு வளர்ச்சியும், பெருமையும்! கூட்டாட்சிக் கருத்தியல் என்பது மாநிலங்களுக்கான சலுகை அல்ல; நாட்டிற்கான பாதுகாப்பு அரண். இதையெல்லாம் ஒன்றிய ஆட்சியாளர்களுக்கு உணர்த்திக் கொண்டே இருக்க வேண்டும்.

**கொட்டக் கொட்டக் குனியக் கூடியவர்கள் அல்ல நாம்!**

கொட்டக் கொட்டக் குனியக்கூடியவர்கள் அல்ல நாம்; (மேசையைத் தட்டும் ஒலி) பேறிஞர் பெருந்தகை அண்ணாவின் உயிலுக்கு உயிர்கொடுப்போம்; தலைவர் கலைஞரின் ஐம்பெரும் முழக்கத்தை நிறைவேற்றிக் காட்டுவோம்; நாம் தான் இதைச் செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நம்மைவிட்டால் இதைச் செய்ய யாருமில்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நாம் தான் இதைச் செய்ய வேண்டும். நம்மை விட்டால் இதைச் செய்ய யாருமில்லை. இது வரலாறு வழங்கியிருக்கக்கூடிய வாய்ப்பு. மலர்க மாநில சுயாட்சி! உருவாகட்டும் இந்தியக் கூட்டாட்சி!

பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியமாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கை தொகுதி1, 16.2.2026 அன்று அரசிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் நகலை தங்களின் அனுமதியோடு உறுப்பினர்களுக்கு வழங்கிட அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நன்றி! வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



குமரிமுனையில் இருந்து அய்யன் திருவள்ளுவர் சிலையை பார்ப்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் எளிதாக சென்றடையும் வகையில், படகு சவாரி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் மூன்று புதிய பயணிகள் படகுகள் வாங்கப்படும் என்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுப்புக்கிணங்க கோவா கப்பல் கட்டும் தளத்தில் (Synergy Shipyard, Goa) நடைபெற்று வரும் படகு கட்டுமானப் பணிகள் தொடர்பாக நேற்று முன்தினம் (17.02.2026) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தமிழ்நாடு கடல்சார் வாரிய அலுவலர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல்அலுவலர் தி.ந.வெங்கடேஷ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன் மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### தொழிலாளர் நலனுக்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்த சிந்தனைச் சிற்பி

# சிங்காரவேலரின் புகழை தொடர்ந்து போற்றுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, பிப். 19 -**

**தொழிலாளர் நலனுக்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்த சிங்காரவேலரின் புகழைத் தொடர்ந்து போற்றுவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

'சிந்தனைச் சிற்பி' சிங்காரவேலர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

விடுதலைப் போராளி இந்தியப் பொதுவுடைமை இயக்க முன்னோடி 'சிந்தனைச் சிற்பி' சிங்காரவேலர் பிறந்தநாள்

தந்தை பெரியாருடன் குடிஅரசில் இணைந்த பேறிஞர் அண்ணா பெரிதும் வியந்த மாமேதை சிங்காரவேலர் அவர்கள்!

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அவருக்குச் சிலை அமைத்து, அந்த அலுவலகத்துக்குச் 'சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மாளிகை' என்றே பெயரும் சூட்டியவர் நம் தலைவர் கலைஞர்.

இந்தியாவில் முதன்முறையாக மே1 உழைப்பாளர் நாளைச் செவ்வணணக் கொடியேற்றிக் கொண்டாடி, தொழிலாளர் நலனுக்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்த சிங்காரவேலரின் புகழைத் தொடர்ந்து போற்றுவோம்! இனி வரும் தலைமுறைகளுக்குப் பாடமாகச் சொல்வோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### ஒன்றிய அரசு ஓரவஞ்சனை செய்தாலும்

# தமிழ்நாட்டை உலக அளவில் மிளிரவைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## 'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, பிப். 19–

ஒன்றிய அரசால் ஓரவஞ்சனை செய்யப்பட்ட தமிழ்நாடு அரசை உலக அளவில் மிளிரச் செய்து காட்டிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து 'தினகரன்' நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.



தினகரன்

பிப்ரவரி 18, 2026 புதன்கிழமை

தமிழ்நாடு மாடல்

வாய்ப்பே இல்லை என்றார்கள், ஜாதகத்தில் வழியே இல்லை என்றார்கள்... ஆனால் ஜோதிடம், ஜாதகம், சாஸ்திரம் உள்ளிட்ட அத்தனை கணிப்புகளையும் தவிடு பொடியாக்கிவிட்டு 2021 சட்டப்பேரவை தேர்தலில் வென்று முதல்வராகி முழு 5 ஆண்டுகாலமும் பதவி நிறைவு செய்ய இருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். அவரது ஆட்சியில் 5வது ஆண்டில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. நோக்கம் என்ன, தொலைநோக்கு பார்வை என்ன என்பதை தெளிவாக சொல்லும் பட்ஜெட் இது.

பிப்.1ம் தேதி இதுவரை இல்லாத நடைமுறையாக முதன்முறை ஞாயிற்றுக்கிழமை பட்ஜெட் தாக்கல் செய்தார் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். கடந்த ஆண்டு பட்ஜெட்டில் தேர்தல் நடைபெறும் மாநிலமான பீகார் மாநிலத்திற்கு ஏராளமான சலுகை மழை. ஆனால் இந்த ஆண்டு

அது வருமாறு:

வாய்ப்பே இல்லை என்றார்கள், ஜாதகத்தில் வழியே இல்லை என்றார்கள்... ஆனால் ஜோதிடம், ஜாதகம், சாஸ்திரம் உள்ளிட்ட அத்தனை கணிப்புகளையும் தவிடு பொடியாக்கிவிட்டு 2021 சட்டப்பேரவை தேர்தலில் வென்று முதல்வராகி முழு 5 ஆண்டுகாலமும் பதவி நிறைவு செய்ய இருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அவரது ஆட்சியில் 5வது ஆண்டில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. நோக்கம் என்ன, தொலைநோக்கு பார்வை என்ன என்பதை தெளிவாக சொல்லும் பட்ஜெட் இது.

பிப்.1ம் தேதி இதுவரை இல்லாத நடைமுறையாக முதன்முறை ஞாயிற்றுக்கிழமை பட்ஜெட் தாக்கல் செய்தார் ஒன்றிய நிதிய மைச்சர் நிர்மலா சீதாராமன். கடந்த ஆண்டு பட்ஜெட்டில் தேர்தல் நடைபெறும் மாநிலமான பீகார் மாநிலத்திற்கு ஏராளமான சலுகை மழை. ஆனால் இந்த ஆண்டு தமிழ்நாடு, கேரளா, புதுவை, மேற்குவங்கம், அசாம் ஆகிய 5 மாநிலங்களுக்கு தேர்தல் நடைபெற இருந்தும், தமிழ்நாடு அடியோடு புறக்கணிக்க ப்பட்டது. மிகவும் பெரிய அளவில் அறிவிக்கப்பட்டதுஐதராபாத்–சென்னை – பெங்களூரு இடையே புல்லட் ரயில் பாதை திட்டம். இதில் ஏதாவது தமிழ்நாட்டிற்கு பயன்கிடைக்குமா? ஒன்றுமே கிடையாது. மும்பை – அகமதாபாத் இடையே அறிவிக்கப்பட்ட முதல் புல்லட் ரயில் திட்டம் 2017ல் தொடங்கப்பட்டது.

2024ல் ரயில் ஓடும் என்றார்கள். இப்போது பாதி அளவில் 2027ல் ஓடும் என்கிறார்கள். முழு அளவில் ஓட 2029 ஆகும் என்கிறார்கள். பா.ஜ ஆளும் மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களிலேயே புல்லட் ரயில் திட்டம் இந்த இழு இழுக்கிறது என்றால், தி.மு.க. ஆளும் தமிழ்நாட்டில் புல்லட் ரயில் திட்டம் எப்போது வரும்?. அவ்வளவு தான் இந்த திட்டத்தின் நிலை வரி பகிர்விலும் தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனை செய்யப்பட்டு இருந்தது. உபிக்கு ரூ.2.69 லட்சம் கோடி தமிழகத்துக்கு ரூ.62,530 கோடி. இன்னும் ஏராளமான வஞ்சனைகள். தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்தாததால், தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய சுமார் ரூ.2,152 கோடி நிதியை மோடி அரசு நிறுத்தி உள்ளது. சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ், முதல் தவணையாக வர வேண்டிய ரூ.573 கோடி நிதியையும், பிஎம்ஸ்ரீ திட்டத்தின் கீழ் வர வேண்டிய நிதியையும் மோடி அரசு நிறுத்தியதால் தமிழ்நாட்டில் 15,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாடுகள் பாதிக்கப்படும் சூழல் இருந்தாலும், அதை எல்லாம் திறம்பட சமாளித்து பல நலத்திட்டங்களை தமிழ்நாட்டில் அமல்படுத்தியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். சமூக நலத்துறை மூலம் பெண்கள் நலனை கருத்தில் கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிய திட்டங்கள் ஏராளம். மாதம் ரூ.1000 மகளிர் உரிமைத்தொகை, விடியல் பேருந்து பயணம், 7 லட்சம் கல்லூரி மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம்.

பெற்றோரை இழந்த 10,637 குழந்தைகள் பள்ளிப்படிப்பினை தொடர, மாதம் ரூ.2,000 வழங்கும் 'அன்புக் கரங்கள்' திட்டம், தமிழ்நாட்டில் பல்வேறு நகரங்களில் படிக்கும், வேலை செய்யும் பெண்கள் தங்குவதற்காக நவீன வசதிகளுடன் 19 இடங்களில் கட்டப்பட்ட தோழி விடுதி திட்டம் என இன்னும் ஏராளம் தாராளமான திட்டங்கள். முத்தாய்ப்பாக மகளிர் சுய உதவி குழுக்களுக்கு இதுவரை ரூ.1.41 லட்சம் கோடி கடன். இவை எல்லாம் மு.க.ஸ்டாலின் அரசு எதிர்கால தமிழ்நாட்டிற்காக போட்ட விதைகள். அதனால் தான் தமிழ்நாடு மாடல் வளர்ச்சியின் மாடல். கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவைதான் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு முன்னுரிமை. இந்த 5 ஆண்டு கால ஆட்சியே அதற்கு சாட்சி.

இவ்வாறு 'தினகரன்' முதல்வரை பாராட்டியுள்ளது.

### திருக்குவளையில் 'வெல்லும் தமிழ்ப்பெண்கள்' ஸ்டாலினின் மகளிர்படை பரப்புரை பயிற்சிக் கூட்டம்!

நாகை. பிப்.19 -

நாகை மாவட்டம் திருக்குவளையில் கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி அளவில் பாகத்திற்கு ஒருவரை பொறுப்பாளராக தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இல்லம்தோறும் பரப்புரை பற்றிய பயிற்சிக்கான வெல்லும் தமிழ்ப் பெண்கள் என்ற தலைப்பில் ஸ்டாலினின் மகளிர்படைக்கு பரப்புரை பயிற்ச்சிக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப. கோவிந்தராஜன், க.இராஜேந்திரன். ஒன்றிய தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் கீழையூர் கிழக்கு ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், கீழ்வேளூர் தெற்கு பழனியப்பன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ் ஆகியோர் முன்னிலையில் வைத்தனர். கீழையூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் சோ.பா.மலர்வண்ணன் வரவேற்றார்.

கூட்டத்திற்கு நாகப்பட்டினம் மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கு தலைவர் என்.கௌதமன் தலைமை தாங்கி வெல்லும் தமிழ்ப்பெண்கள் ஸ்டாலினின் மகளிர்படையினர் பரப்புரையின் போது செய்ய வேண்டிய பணிகள் குறிக்கு விளக்கி பேசினார். கூட்டதில் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், பொதுக் குழு உறுப்பினர் கோ.சிவகுமார், மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர் ஜவஹர் பாஷா, பாலாஜி, லோகநாதன், தியாகராஜன், ஜோதிபாசு, மாவட்ட பிரதிநிதிகள் ஆர். நடராஜன், சி.வீரமணி, மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் கௌசல்யா இளம்பரிதி, மாவட்ட மகளிர் மற்றும் மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் மீரா, கவிதா, மோகனா, மாவட்ட தொண்டர் அணி வலைதள பொறுப்பாளர் ஹேமலதா சரத்பாபு,

மற்றும் வெல்லும் தமிழ்ப்பெண்களின் ஸ்டாலினின் மகளிர்படையினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டார் முடிவில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.புவனேஸ்வரி நன்றி கூறினார்.

### கோவை தெற்கு மாவட்டம்

# மதுக்கரை கிழக்கு ஒன்றிய மற்றும் திருமலையாம்பாளையம், கோட்டூர் ஆகிய பேரூர்க் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை கிழக்கு ஒன்றியச் செயலாளர் விஜயசேகரன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **பி.திருமூர்த்தி** (3/185, கருப்பராயன் கோவில்மேடு, மயிலேறிபாளையம், கோவை-641032.) அவர்கள் மதுக்கரை கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும்;

கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியம், திருமலையாம்பாளையம் பேரூர்ச் செயலாளர் ராமராஜீ அவர்களுக்குப் பதிலாக, **ஆர்.கிருஷ்ணசாமி**, (சின்னதம்பி கவுண்டர் வீதி, குமிட்டிபதி, கோவை-641032.) அவர்கள் திருமலையாம்பாளையம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும்;

ஆனைமலை கிழக்கு ஒன்றியம், கோட்டூர் பேரூர்ச் செயலாளர் கே.வி.பால்ராஜ் அவர்களுக்குப் பதிலாக **இ.ராமகிருஷ்ணன்**, (1-டி, ஜெயப்பிரகாஷ் வீதி, கோட்டூர், மலையாண்டிபட்டிணம், பொள்ளாச்சி, கோவை மாவட்டம்.) அவர்கள், கோட்டூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த ஒன்றிய/பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை – 18
நாள்: 18.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### கோவை தெற்கு மாவட்டம்

# வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை கிழக்கு, ஆனைமலை வடக்கு, ஆனைமலை மத்திய ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், கோவை தெற்கு மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை கிழக்கு, ஆனைமலை வடக்கு ஆகிய

2 ஒன்றியங்கள் **ஆனைமலை கிழக்கு, ஆனைமலை வடக்கு, ஆனைமலை மத்திய** ஆகிய மூன்று ஒன்றியங்களாகவும் பிரிக்கப்பட்டு, அந்த ஒன்றியங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

மேற்குறிப்பிட்டவாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பின்வருமாறு அந்தந்த ஒன்றியங்களுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**ஆனைமலை கிழக்கு ஒன்றியம்** : 1.அங்கலக்குறிச்சி, 2.பில்சின்னாம்பாளையம், 3. கரியாஞ்செட்டிபாளையம், 4.கம்பாலப்பட்டி, 5.தென்அர்த்தநாரிபாளையம், 6.ஜல்லிபட்டி, 7.எஸ்.நல்லூர் ஆகிய 7 ஊராட்சிகள் மற்றும் கோட்டூர் பேரூர்.

**ஆனைமலை கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் : டி.யுவராஜ்**, 4/94, ரெட்டியாரூர் & அஞ்சல், ஆனைமலை, கோவை-642 007.

**ஆனைமலை வடக்கு ஒன்றியம்** : 1.திவான்சாபுதூர், 2.வாழைக்கொம்பு நாகூர், 3. தாத்தாராவத்தன்புதூர், 4.சுப்பேகவுண்டன்புதூர், 5.ஆத்துப்பொள்ளாச்சி ஆகிய 5 ஊராட்சிகள்.

**ஆனைமலை வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : எஸ்.யுவராஜ்**, 3/54, மெயின் ரோடு, சுப்பேகவுண்டன்புதூர் & அஞ்சல், ஆனைமலை, கோவை-642 103.

**ஆனைமலை மத்திய ஒன்றியம்** : 1.பெத்தநாயக்கனூர், 2.சோமந்துறை, 3.தென்சித்தூர், 4.ரமணமுதலிபுதூர், 5.தென்சங்கம்பாளையம், 6.சிங்காநல்லூர், 7.வக்கம்பாளையம், 8.நாயக்கன்பாளையம், 9.அம்பாரம்பாளையம் ஆகிய 9 ஊராட்சிகள்.

**ஆனைமலை மத்திய ஒன்றிய பொறுப்பாளர் : எஸ்.ஆர்.அண்ணாதுரை**, 3/64, மாகாளியம்மன் கோவில் வீதி, தென்சங்கம்பாளையம், வேடசந்தூர் அஞ்சல், ஆனைமலை, கோவை மாவட்டம்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை – 18
நாள்: 18.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

"விருதுநகர் வடக்கு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.வி.கந்தசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்,

விருதுநகர் வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 20 (வெள்ளிக் கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் விருதுநகர் வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை – 18
நாள்: 18.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.